# யுக்ரைன் அதிபரை பிரதமர் சந்தித்தார்

செப்டம்பர் 23, 2024

23 செப்டம்பர் 2024 அன்று, நியூயார்க்கில் நடைபெற்ற எதிர்கால உச்சி மாநாட்டின்போது, பிரதமர் திரு நரேந்திர மோடி, உக்ரைன் அதிபர் திரு வோலோடிமிர் ஜெலென்ஸ்கியுடன் இருதரப்பு சந்திப்பை நடத்தினார்.

2. பிரதமரின் சமீபத்திய உக்ரைன் பயணத்தை நினைவுகூர்ந்த இரு தலைவர்களும் இருதரப்பு உறவுகளை தொடர்ந்து வலுப்படுத்துவது குறித்து திருப்தி தெரிவித்தனர். உக்ரைனின் நிலைமை மற்றும் அமைதிக்கான பாதையில் முன்னேறுவதற்கான வழி ஆகியவை அவர்களின் விவாதங்களில் முக்கியமாக இடம்பெற்றன.

3. இருதரப்பு உறவு மற்றும் உரையாடல் மற்றும் அனைத்து பங்குதாரர்களுக்கு இடையேயான ஈடுபாட்டின் மூலம் மோதலுக்கு அமைதியான முறையில் தீர்வு காணப்பட வேண்டும் என்ற இந்தியாவின் தெளிவான, நிலையான மற்றும் ஆக்கபூர்வமான அணுகுமுறையை பிரதமர் மீண்டும் வலியுறுத்தினார். மோதலுக்கு நிரந்தரமான மற்றும் அமைதியான தீர்வை காண்பதற்கு இந்தியா தன்னால் முடிடிந்த வழிகளில் அனைத்து ஆதரவையும் வழங்க திறந்த நிலையில் உள்ளது என்று அவர் தெரிவித்தார்.

4. கடந்த சுமார் மூன்று மாதங்களில் இரு தலைவர்களுக்கும் இடையே நடைபெறும் மூன்றாவது சந்திப்பு இதுவாகும். இரு தலைவர்களும் தொடர்ந்து தொடர்பிலிருக்க ஒத்துக்கொண்டனர்.

**நியூயார்க்**
**செப்டம்பர் 23, 2024**